

பாடம் 5

ஜூலை 23-29

# தீவிர வெப்பம்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** ஆதி 22; ஓசியா 2:1–12; யோபு 1:6–2:10; 2கொரி 11:23–29; ஏசா 43:1–7.

**மனன வசனம்:** 'கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட் படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும் போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்தநாளாயிருப்பார், கர்த்தருக்குச் சித்த மானது அவர் கையினால் வாய்க்கும்'. ஏசாயா 53:10.

பிரபல கிறிஸ்தவ எழுத்தாளரான சி.எஸ்.லீவிஸின் மனைவி மரணப்படுக் கையில் இருந்தபோது, 'தேவனை நம்புவதை விட்டுவிடுகிற ஆபத்தில் நான் இருப்பதாக நினைக்கவில்லை. அவரைப் பற்றிய இத்தகைய பயங்கரமான விஷயங்களை நம்புவதுதான் உண்மையான ஆபத்து. "தேவனே இல்லை" என்று அல்ல, 'தேவன் உண்மையில் இப்படிப்பட்டவர்தாம்" என்கிற முடிவுக்கு வந்துவிடக்கூடாது என்றுதான் பயப்படுகிறேன்' என்று எழுதினார்.[1]

வாழ்க்கையில் கடும் வேதனைகள் வரும்போது, நம்மில் சிலர் தேவனை முற்றிலும் புறக்கணிக்கிறோம். வேறுசிலருக்கு, லீவிஸைப் போல, தேவனைப் பற்றி தவறான புரிதலுக்கு வருவதற்கும், அவரைப்பற்றி மோசமான விதங்களில் எண்ணுவதற்கும் தூண்டுதல் ஏற்படுகிறது. எவ்வளவு தூரம் வெப்பத்தைத் தாங்க முடியம்? இதுதான் கேள்வி. தேவன் தம் மக்களை 'தம் குமாரனுடைய சாயலில்' மாற்றுகிற தம் இறுதி நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அவர்களை அதிகபட்ச மாக எவ்வளவு வெப்பத்திற்குள் செல்ல அனுமதிக்கிறார்? ரோமர் 8:29.

**இவ்வாரக் கண்ணோட்டம்:** தம்மை அறிந்துகொள்ள விரும்புகிறவர்களும், தம்மை நேசிப்பவர்களும் தம்மை தவறாகப் புரிந்துகொள்கிற ஆபத்தை எதிர்கொள்ள தேவன் ஏன் தயாராக இருக்கிறார்? உங்களை 'தம் குமாரனுடைய சாயலில்' மாற்றுவதற்கு, எவ்வளவு தூரம் தாம் தவறாகப் புரிந்துகொள்ளப்பட ஆயத்தமாக இருக்கிறார்?

*2022, ஜூலை 30 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# அக்கினிக்குப்பியில் ஆபிரகாம்

காரணம் எதுவும் சொல்லாமல், திடீரென அவருடைய மகனை சர்வாங்க தகனப்பலியாகப் பலியிடுமாறு ஆபிரகாமிடம் தேவன் சொல்கிறார். ஆதி 22. ஆபிரகாமுக்கு எப்படி இருந்திருக்கும்? பரிசுத்தரான ஒரு தேவன் ஆபிரகாமின் குமாரனைப் பலியிடச் சொன்னது வெறுப்பூட்டுகிற விஷயம். ஒருவேளை ஆபிரகாம் அதை நியாயமான கோரிக்கையாக நினைத்திருந்தாலும், அவருக்குச் சுதந்தரம் கொடுப்பதாக தேவன் கொடுத்த வாக்குறுதி என்னவாகும்? குமாரன் இல்லாமல், அந்த வாக்குறுதி நிறைவேறாது.

**ஆபிரகாமிடம் தேவன், அவரது குமாரனைப் பலியிடும்படி கேட்டது ஏன்? தேவனுக்கு எல்லாம் தெரியும் என்றால், அவ்வாறு கேட்டதற்கான காரணம் என்ன?**

---

தேவனுடைய கோரிக்கையும், நேரமும் எதேச்சையாக நடந்தது அல்ல. முடிந்த அளவுக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்த வேண்டுமெனக் கணித்துச் சொல்லப்பட்டது. ஏனென்றால், 'ஆபிரகாம் கடும் பாரமான வருடங்களை எதிர்கொண்டு, இளைப்பாறுதலுக்காக ஏங்குகிற காலம் வரும்முன், தேவன் ஆபிரகாமுக்கு கடைசியாக வைத்திருந்த மிகக்கடுமையான சோதனை அது'.[1] இத்தகைய சோதனையை வைத்த தேவன் மோசமானவரா? இல்லவே இல்லை, 'அந்தக் கொடிய சோதனையின் அந்தகாரமான நாட்களில் ஏற்பட்ட வியாகுலத்தை, மனிதனின் மீட்பிற்காக நித்திய தேவன் தருகிற பலியின் மேன்மையை அவன் உணர்ந்துகொள்ளும்படி அனுமதித்தார்'.[2]

அது ஒரு சோதனைதான்; ஆபிரகாம் தன் மகனைக் கொல்லவேண்டும் என்பது தேவநோக்கமல்ல. தேவன் சிலசமயங்களில் செயல்படுகிற விதத்தைப் புரிந்துகொள்ள இது உதவுகிறது. நாம் முடிக்கும்படி தேவன் திட்டமிடாத ஒன்றைச் செய்யும்படி அவர் சொல்லலாம். நாம் போய்ச்சேர அவர் திட்டமிடாத ஓர் இடத்திற்கு நம்மைச் செல்லும்படி அவர் கூறலாம். தேவனுக்கு முடிவு முக்கியமல்ல; அந்தச் செயல்முறை நம்மில் மாற்றத்தை ஏற்படுத்தும்போது நாம் என்ன கற்றுக்கொள்கிறோம் என்பதுதான் முக்கியம்.

ஆபிரகாமின் அனுபவத்தை மனதில் வைத்துதான் யூதர்களிடம் இயேசு பின்வருமாறு சொல்லியிருப்பார்: 'உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான்'. யோவான் 8:56. ஆபிரகாமிடம் இதை யாராவது சொல்லியிருந்தால், சாத்தானுடைய ஆலோசனை என்று புறக்கணித்திருக்க வாய்ப்புள்ளது. அந்த ஒட்டுமொத்த அனுபவத்தில் ஆபிரகாம் நிலைத்திருக்கவும் கற்றுக்கொள்ளவும் எது உதவியது என்றால், தேவனுடைய சத்தத்தை அறிந்திருந்ததுதான்.

[1]Ellen G. White, Patriarchs and Prophets, p. 147.

[2]Patriarchs and Prophets, p. 154.

---

**தேவனுடைய சத்தத்தை அறிந்திருக்கிறீர்களா? தேவன் உங்களிடம் பேசும்போது, அதை எவ்வாறு கண்டுபிடிக்கிறீர்கள்? அவர் எந்தெந்த வழிகளில் தம் சித்தத்தை உங்களிடம் தெரியப்படுத்துகிறார்?**

# வழிதப்பிப்போன இஸ்ரவேலர்

ஓசியாவின் அனுபவத்தில் சில முக்கியப் பாடங்கள் உள்ளன. ஓசியாவின் சூழ்நிலை கவனிக்கத்தக்கது. அவனுடைய மனைவி கோமேர், அவனிடமிருந்து ஓடி, வேறு ஆண்களுடன் சேர்ந்து பிள்ளைகளைப் பெறுகிறாள். அவள் பாலியல் ரீதியாக உண்மையற்றவளாக இருந்தாலும், அவளை மீண்டும் சேர்த்துக் கொண்டு, முழு அன்பைக் காட்டும்படி ஓசியாவிடம் தேவன் சொல்கிறார். அந்தச்சம்பவம் தேவனையும் இஸ்ரவேலையும் சுட்டிக்காட்டுகிற உவமையாகக் கையாளப்படுகிறது. இஸ்ரவேலர்கள் தேவனைவிட்டு விலகி, பிறதேவர்களை வணங்கி, ஆவிக்குரிய விதத்தில் விபசாரம்செய்தார்கள்; ஆனாலும், தேவன் அவர்கள் மேல் அன்பாக இருந்தார்; தம் அன்பை அவர்களுக்குக் காட்ட விரும்பினார். ஆனால் அதற்கு அவர் கையாளுகிற வழிகளைப் பாருங்கள்!

**இஸ்ரவேலை தம்மிடம் இழுப்பதற்கு என்ன வழிகளை தாம் பயன்படுத்தப்போவதாக தேவன் சொல்கிறார்? ஓசியா 2:1–12. அந்த அனுவபங்கள் எப்படிப்பட்டவை?**

**ஓசியா 2:2, 3**______________________________

**ஓசியா 2:5–7**______________________________

**ஓசியா 2:8, 9**______________________________

**ஓசியா 2:10**______________________________

தேவன் நம்மை மனந்திரும்புதலுக்கு வழிநடத்தும்போது தேவனைப்பற்றி நமக்குள் ஏற்படுகிற இரு முக்கிய அனுபவங்களை இச்சம்பவம் காட்டுகிறது.

முதலாவது, தேவன் செயல்படுவதை நாம் உணராமல் போகிற ஆபத்து இருக்கிறது. நம் பாதையில் கூரான முட்கள் மறைத்திருக்கும்போது, பாதையைக் காணமுடியாதபடி மதில் எழுந்து நிற்கும்போது, தேவன் செயல்படுவதாக யார் நினைப்பார்? ஓசி 2:6. நம் அடிப்படைத் தேவைகள்கூட கிடைக்காமல், அவமானமான சூழல் ஏற்பட்டால், தேவன்தாம் அதற்குக் காரணமென நினைக்க முடியுமா? ஓசி 2:9,10. ஆனால் அவர் நம்மை மிகவும் நேசிக்கிறார் என்பதுதான் உண்மை.

இரண்டாவது, தேவன் செயல்படுவதை உணர்ந்து, அவரை தவறாகப் புரிந்து கொள்கிற ஆபத்து இருக்கிறது. ஏனென்றால் அவர் செய்வது நமக்குப் பிடிக்காது. பாதிக்கப்பட்டதாக, அவமானமாக உணரும்போது, நம்மைக் காப்பாற்ற தேவன் தலையிடவில்லை, நம்மைக் கவனிக்கவில்லை என்று அவரைக் கொடியவரெனக் குற்றஞ்சாட்டலாம். ஆனால் தேவன் தம் அன்பின் உடன்படிக்கைமூலம் நம்மைப் புதுப்பிக்க தேவன் எப்போதும் செயல்பட்டுவருகிறார்.

**தேவனைப்பற்றி ஓசியா 2:14-23 வசனங்கள் வெளிப்படுத்துகிற உண்மை என்ன? உங்கள் வாழ்க்கையில் ஏதாவது விஷயத்தில் நீங்கள் தேவனைவிட்டு ஓடுகிறீர்களா என்பதைக் காட்டும்படி பரிசுத்த ஆவியானவரிடம் கேளுங்கள். ஆவியானவர் உணர்த்தினால், அக்கினிக் குப்பி மூலமாகத்தான் செல்வேன் என்று ஏன் நீங்கள் அடம்பிடிக்க வேண்டும்? அனைத்தையும் ஆண்டவரிடம் அர்ப்பணிக்கவிடாமல் உங்களைத் தடுத்துக்கொண்டிருப்பது என்ன?**

# தொழுகைமூலம் பிழைத்தல்

**யோபுவினுடைய உபத்திரவத்திற்குக் காரணம் என்ன? யோபு 1:6-2:10.**

தேவதூதர்கள் தேவனைக் காணச் செல்கிறார்கள்; சாத்தானும் அவர்களோடு செல்கிறான். ‘‘நீ எங்கே சென்றிருந்தாய்’’ என்று சாத்தானிடம் தேவன் கேட்கிறார்; அதற்கு சாத்தான், ‘‘பூமியெங்கும் உலாவி, அதில் சுற்றித்திரிந்து வருகிறேன்’’ என்றான். யோபு 1:7. அப்போதுதான் தேவன், ‘‘என் தாசனாகிய யோபின்மேல் கவனம் வைத்தாயோ?’’ என்று கேட்கிறார். யோபு 1:8. கேள்வியில் விசேஷம் ஒன்றுமில்லை; ஆனால் அந்தக் கேள்வியைக் கேட்டது யார் என்பதுதான் விசேஷம். யோபுவை ஆராய்ச்சிப் பொருளாக்க சாத்தான் கேட்கவில்லை; தேவன்தாம் சொல்கிறார். நடக்கப்போவதை அறிந்தே யோபுவை சாத்தானுடைய கவனத்திற்குக் கொண்டுசெல்கிறார். ஆனால் கீழே பூமியில் இருந்த யோபுவுக்கு, அந்த அக்கினிக் குப்பி எவ்வளவு தீவிர அக்கினிக்கு ஆளாகுமென்று தெரியாது. தேவனல்ல சாத்தானே யோபுவுக்கு உபத்திரவத்தைக் கொடுத்தான்; ஆனால் யோபுவின் சொத்துகளையம் பிள்ளைகளையும் அவனுடைய உடல் ஆரோக்கியத்தையும் அழிப்பதற்கு தேவனே சாத்தானுக்கு அனுமதி வழங்கினார். யோபு உபத்திரவமடைய தேவன்தாம் அனுமதித்தார் என்றால், அவனை சாத்தான் வாதிப்பதும், தேவன் வாதிப்பதும் ஒன்றுதானே? யோபுவுக்கு அவ்வளவு வேதனை கொடுக்க சாத்தானை அனுமதித்த தேவன் எவ்வாறு நீதியும் பரிசுத்தமும் உள்ளவராக இருக்கமுடியும்? அந்தச் சூழ்நிலை ஒரு விசேஷித்த நிகழ்வா? அல்லது, இன்றும் தேவன் நம்முடன் நடந்துகொள்கிற விதமா?

**அந்தப் பாடுகளை யோபு எவ்வாறு எதிர்கொண்டார்? யோபு 1:20,21.**

---

அத்தகைய உபத்திரவங்களில், இரண்டு விதங்களில் நடக்கவாய்ப்புள்ளது. கசப்பும் கோபமும் அடைந்து, தேவன் கொடியவர் என்று சொல்லி, அவரைவிட்டு விலகலாம்; தேவன் இல்லை என்று சொல்லலாம். அல்லது, தேவனை மேலும் இறுக்கமாகப் பிடிக்கலாம். யோபு தேவனுடைய பிரசன்னத்திலேயே இருந்து, அவரை ஆராதித்து, அந்தப் பேரழிவு நிலையைக் கையாளுகிறார்.

நாம் வியாகுலத்தில் இருக்கும்போது உதவக்கூடிய தொழுகையின் மூன்று அம்சங்களை யோபு 1:20,21இல் காணலாம். முதலாவது, யோபு தன் உதவியற்ற நிலையை ஏற்றுக்கொண்டு, எதைப்பற்றியும் கேள்விகேட்க தனக்கு உரிமையில்லை என்று ஒத்துக்கொள்கிறார். ‘நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்’. யோபு 1:21. இரண்டாவது, இன்னும் எல்லாம் தேவனுடைய கட்டுப்பாட்டில் இருப்பதை யோபு ஒத்துக்கொள்கிறார்: ‘கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்’. யோபு 1:21. மூன்றாவது, தேவனுடைய நீதியில் தனக்குள்ள நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்தி யோபு முடிக்கிறார்: ‘கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்’. யோபு 1:21.

---

**ஏதாவது பாடுகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்களா? யோபு பின்பற்றின அதே படிகளைப் பின்பற்றுங்கள். அவை எவ்வாறு உங்களுக்கும் உதவியாக இருக்கும்?**

# நம்பிக்கையால் பிழைத்தல்

*'பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று. நாங்கள் எங்கள் மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கை யாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித் திருந்தோம்'. 2கொரி 1:8,9.*

தேவன் தெரிந்துகொண்ட பவுல் அப்போஸ்தலன், மற்றவர்களைவிட அதிக உபத்திரவத்தைச்சகித்திருக்கிறார். ஆனாலும் முடங்கவில்லை. மாறாக, தேவனைத் துதிப்பதில் அதிகமாக வளர்ந்தார். அவர் பட்ட பாடுகளின் பட்டியலை 2கொரி 11:23-29இல் வாசியுங்கள். பிறகு, 2கொரி 1:3-11ஐ வாசியுங்கள்.

**தேவனுடைய ஆறுதலையும் மனதுருக்கத்தையும் பெறுவதற்கான காரணம், 'எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல்செய்யத் திராணி யுள்ளவர்களாகும்படி' என்று 2கொரி 1:4இல் பவுல் சொல்கிறார். உபத்திரவம் அனு பவிப்பது எந்த அளவிற்கு ஊழியத்திற்கான அழைப்பாக இருக்கலாம்?**

பாதிக்கப்படுகிற மக்களுக்கு நம்மூலம் ஊழியம்செய்ய தேவன் விரும்பு கிறார். அதனால் அதேவித பாதிப்புகளுக்கு முதலில் நாம் ஆளாவதற்கு அவர் அனு மதிக்கலாம். பிறகு நமக்குத் தைரியம் தருவார்; கருத்தியல் ரீதியாக அல்ல, தேவனு டைய ஆறுதல், மனதுருக்கத்தை நம் வாழ்வில் அனுபவிப்பதில் அதைப் பெறு கிறோம். இதுதான் இயேசுவின் வாழ்க்கையில் காணப்படுகிற நியதி. எபி 4:15.

பவுல் தான் பட்ட கஷ்டங்கள்பற்றிச் சொல்வது, அவர்மேல் நமக்கு அனு தாபத்தை உண்டாக்குவதற்காக அல்ல. நாம் மோசமான சூழ்நிலைகளில் இருந் தாலும், பிதா நமக்கு தம்முடைய மனதுருக்கத்தையும் ஆறுதலையும் தரமுடியும் என்பதைப் புரிந்துகொள்வதற்கே. நம் வாழ்க்கையில் நாம் விரக்தியடையலாம்; ஏன் கொலைசெய்யப்படலாம். ஆனால் பயப்படவேண்டாம்; நாம் தேவனையே சார்ந்திருக்கச் சொல்கிறார். நாம் அவரை நம்பலாம்; ஏனென்றால் நம் தேவன், 'மரித்தோரை எழுப்புகிறவர்'. 2கொரி 1:9.

சுவிசேஷத்தை அறிவிப்பதிலேயே பவுலின் கவனம் முழுவதும் இருந்தது; ஏனென்றால், வருங்காலங்களில் தேவன் தன்னைக் காப்பாரென அறிந்திருந்தார். பவுலால் உறுதியாக இருக்கமுடிந்ததற்கு 2கொரி 1:10,11இல் மூன்று காரியங்களைச் சுட்டிக்காட்டுகிறார்.

1. தேவன் தம்மைப்பற்றி ஏற்கனவே நிரூபித்திருப்பது: 'மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார். இன்னும் தப்புவிப்பார்'. 2கொரி 1:10.
2. தேவன்மேல்மாத்திரம் கவனமாக இருக்க, பவுல் தீர்மானமாக இருந்தது: 'இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்'. 2கொரி 1:10.
3. பரிசுத்தவான்கள் இடைவிடாமல் வேண்டிக்கொண்டது: 'நீங்களும் விண் ணப்பத்தினால் எங்களுக்கு உதவிசெய்யுங்கள்'. 2கொரி 1:11.

**போராட்டங்களைச் சந்திக்கும்போது, சுயபரிதாபம் என்கிற கண்ணியில் சிக்காதபடிக்கு, பவுலிட மிருந்து என்ன கற்றுக்கொள்ளலாம்?**

# தீவிர வெப்பம்

நம் வாழ்க்கையில் பரிசுத்தத்தையும் கிறிஸ்துவைப் போன்ற தன்மையையும் கொண்டுவருவதற்கு தேவன் பயன்படுத்துகிற பல வகை அக்கினிக் குப்பிகள் பற்றி இதுவரை பார்த்தோம். இந்த உதாரணங்களை வாசிக்கும்போது, தேவனை ஒரு கடினமான எஜமான்போல சிலர் கருதக்கூடும். சிலர், ''தேவன் எங்களுடைய நன்மையை விரும்புகிறார் என்பது தெரியும், ஆனால் இந்த உதாரணங்கள் அன்புக்கும், அக்கறைக்கும் நல்ல உதாரணங்கள் அல்ல. மாறாக, அடாவடித்தனம் போலத் தெரிகிறது. அவர் ஒரு நோக்கத்தோடு அனுமதிக்கிற விஷயங்கள் மிகுந்த கஷ்டத்தைக் கொடுக்கின்றன; நம்மால் எதுவும் செய்யமுடிவதில்லை' என்றுகூட சொல்லலாம்.

பாவம் நிறைந்த இந்த உலகத்தில் வாழும்போது, நிகழ்கிற சம்பவங்களுக்கு நாம் காரணம் முழுவதையும் அறியமுடியாது. பரலோகத்தில் அதிகமாக அறிந்துகொள்வோம். 1கொரி 4:5; 13:12. ஆனால் இப்போதைக்கு, நமக்கு பிடிக்காத காரியங்கள் நிகழ்ந்தாலும், தேவன் இருக்கிறார், நம்மேல் அக்கறை காட்டுகிறார் என்பதை நம்பிதான் வாழ்ந்தாக வேண்டும். இந்தப் பதற்றமான நிலையை ஏசாயா அருமையாக விவரித்திருக்கிறார்.

ஏசா 43:1-7ஐ வாசியுங்கள். 2ம் வசனத்தில், தம் மக்கள் தண்ணீரையும் அக்கினியையும் கடப்பார்களென தேவன் சொல்லுகிறார். இவை பயங்கரமான ஆபத்துகளைச் சுட்டிக்காட்டுகின்றன; செங்கடலையும் யோர்தானையும் கடக்கிற திகிலான அனுபவங்களை அவை சுட்டக்காட்டலாம். ஆனால் அது புதியதொரு வாழ்க்கைக்கான பயணமாக இருந்தது. இந்த ஆபத்துகளிலிருந்து தேவன் தம் மக்களைக் காப்பார், எளிதான வழியில் நடத்திச்செல்வார் என்று சொல்லியிருந்தா நன்றாகத்தான் இருக்கும். மாறாக அவர் சங் 23இன் மேய்ப்பனைப்போல, கடினமான காலக்கட்டங்கள் வரும்போது, அவர்களோடு இருப்பதாகச் சொல்கிறார். எனவே தேவபிள்ளைகள் மேற்கொள்ளப்பட மாட்டார்கள்.

**தண்ணீரையும் அக்கினையையும் கடக்கும்போது, எந்தெந்த வழிகளில் தேவன் தம் மக்களைத் தேற்றுவதாக ஏசா 43:1-7 சொல்லுகிறது? இது தேவனைப்பற்றி என்ன பிம்பத்தைக் கொடுக்கிறது? என்ன வாக்குறுதிகளை நீங்கள் உங்களுக்கு சொந்தமாக்கலாம்?**

தேவனுடைய அக்கினிக் குப்பிகள்பற்றி மூன்று கருத்துகள்:

1. தேவன் கொடுக்கிற தீவிர வெப்பம் நம்மை அழிப்பதற்கல்ல, நம்முடைய பாவத்தை அழிப்பதற்கே.
2. அது நம்மைத் துன்பப்படுத்துவதற்கு அல்ல, மாறாக நாம் சிருஷ்டிக்கப்பட்ட நோக்கத்தின்படி நம்மைச் சுத்திகரிப்பதற்கே.
3. இந்த அனுபவங்கள் முழுவதிலும் தேவன் கனிவோடு நம்மேல் அக்கறை காட்டுகிறார். என்னவானாலும், அவர் நம்மைத் தனியே விடமாட்டார்.

**தேவனுடைய செயல்கள், குணம்பற்றி பின்வரும் வசனங்கள் போதிப்பது என்ன? சங் 103:13, 14; மத் 28:20; 1கொரி 10:13; 1பேதுரு 1:7. இந்த வசனங்களின் எதார்த்தத்தை உங்கள் வாழ்க்கையில் எவ்வாறு அனுபவித்திருக்கிறீர்கள்?**

# மேலும் படிக்க:

“தேவன் தம் மக்களை உபத்திரவம் எனும் சூளையில் புடமிடுவது வழக்கமான ஒன்றே. சூளையின் வெப்பம்தான் கிறிஸ்தவக் குணம் என்கிற சுத்தப்பொன்னிலிருந்து கசடை அகற்றும். இயேசு அந்தச் சோதனையைப் பார்க்கிறார்; அந்த விலையேறப்பெற்ற உலோகம் தம் அன்பின் பிரகாசத்தைப் பிரதிபலிப்பதற்கு அதிலிருந்து எதை நீக்கவேண்டுமென அறிந்திருக்கிறார். நுணுக்கமாகச் சோதிக்கிற பாடுகளால் தம் தாசர்களைச் சிட்சிக்கிறார். தம் பணியை முன்னெடுத்துச் செல்கிற ஆற்றல்கள் சிலரிடம் இருப்பதைப் பார்த்து, அவர்களுக்கு பாடுகளை அனுமதிக்கிறார்; அவர்களுடைய குணம் சோதிக்கப்படுகிற இடத்திற்கு தன் முன்னறிவின்படி கொண்டுவருகிறார். அவர்களுடைய பெலவீனத்தை அவர்களுக்குக் காண்பித்து, தம்மைச் சார்ந்திருக்கும்படி போதிக்கிறார். இவ்வாறு அவருடைய நோக்கம் நிறைவேறுகிறது. அவர்களுக்கு அருளப்பட்ட ஆற்றல்களின் நோக்கம் நிறைவேறும்படி கல்வியும் பயிற்சியும் சிட்சையும் ஆயத்தமும் பெற்றுக்கொள்கிறார்கள்.’ [1]

‘தேவனுடைய முன்னறிவின்படி பாடுகளைச் சகிக்க நாம் அழைக்கப்பட்டிருந்தால், பிதாவின் கரம்தாம் கசப்பான பாத்திரத்தை நம் வாய்களுக்கு அருந்தக் கொடுக்கிறது என்பதை நினைவுகூர்ந்து, அதைப் பருகவேண்டும், சிலுவையை ஏற்றுக்கொள்ள வேண்டும். பகல் வெளிச்சத்தில் நம்புவதுபோல, இருளிலும் அவரை நம்புவோமாக. ஒவ்வொன்றையும் நம்முடைய நன்மைக்காகத்தான் தருவார் என்று நம்ப முடியாதா? உபத்திரவத்தின் இருளில் இருக்கும்போதுகூட, கல்வாரிச் சிலுவை வெளிப்படுத்திய அன்பை நாம் நினைவுகூர்ந்தால், நம் இருதயத்தாலும் சத்தத்தாலும் நன்றிமிக்க துதியால் அவரைப் போற்ற மறுக்கமுடியுமா?[2]

[1] Ellen G. White, Patriarchs and Prophets, pp. 129, 130.
[2] Ellen G. White, Testimonies for the Church, vol. 5, p. 316.

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *யாராவது தனக்கு ஏற்பட்ட விசுவாச சோதனைபற்றி வகுப்பில் பகிர்ந்துகொள்ளட்டும்; ஒருவேளை அது ஆபிரகாமுக்கு ஏற்பட்ட சோதனையளவு இல்லாவிட்டாலும், போதுமான அளவு சோதித்திருக்கும். அந்த நபருடைய வெற்றி அல்லது தோல்விகளிலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?*

2. *சிலுவையில் அறையப்படுவதற்குமுந்தைய 24 மணி நேரத்தை கிறிஸ்து எவ்வாறு செலவிட்டார்? அவர் சந்தித்தத் தீவிர சூழ்நிலைகள் என்ன? அவற்றை எவ்வாறு சகித்தார்? நாம் நம்முடைய அக்கினிக் குப்பிகளை எதிர்கொள்ளும்போது, அவருடைய அனுபவத்தின் என்ன நியதிகளை நம் வாழ்க்கையில் பயன்படுத்தலாம்?*

3. *நாம் படுகிற உபத்திரவங்கள்மூலம் எவ்வாறு உபத்திரவத்திலிருக்கிற மற்றவர்களுக்கு ஊழியம்செய்யமுடியும்? இந்தக் கருத்து உண்மையாக இருந்தாலும், இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்வதில் என்னென்ன சிக்கல்கள் உள்ளன?*

3. *‘பகல் வெளிச்சத்தில் நம்புவதுபோல, இருளிலும் அவரை நம்புவோமாக’ என்று எலன் ஒய்ட் எழுதுகிறார். அவ்வாறு சொல்வது எளிது, ஆனால் செய்வது கடினம். இதுபோன்ற விசுவாசத்தை வெளிப்படுத்துவதற்கு ஒருவருக்கு ஒருவர் எவ்வாறு உதவலாம்? கடினமான காலக்கட்டங்களில் தேவனை நம்புவது ஏன் முக்கியமானது?*

# ஞானஸ்நானத்திற்கு வருதல்: பாகம் 5

**ஆண்ட்ரூ மெக்செஸ்னி**

ஜுனியர் ஞானஸ்நானம் எடுக்கிற நாள் வந்தது. பிரசிலின் மனவ்ஸ் எனும் இடத்திலுள்ள ஆல்பா செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபபையில் மாலை 4 மணிக்கு ஜுனியருடன் சேர்த்து ஐந்து பேருக்கு ஞானஸ்நானம் கொடுக்கத் தீர்மானித்திருந்தார்கள். “நான் வர முடியாது. என்னை கோவிலில் விடுங்கள்” என்று அப்பா சொன்னார்.

அம்மாவும் ஜுனியரும் ஆலயத்திற்குச் சென்றுகொண்டிருந்தபோது, அப்பா பூசாரி உடையோடு ஆலயத்திற்கு வந்தால் என்ன செய்வதென அம்மா கேட்டார். “எனக்குப் பிரச்சனையில்லை, அவர் வந்தால் போதும்” என்று ஜுனியர் சொன்னான்.

ஆலயத்தில் ஜுனியருக்கு முதலாவது ஞானஸ்நானம் கொடுக்கப்போவதாகச் சொல்லிவிட்டு, ஞானஸ்நான தொட்டிக்கு அருகே அவன் தன் சாட்சியைப் பகிர்ந்துகொள்ள போதகர் அழைத்தார். அவன் தன் சாட்சியைச் சொல்லிவிட்டு, தொட்டிக்குள் இறங்குவதற்கு முன் கைகளை அசைத்துக் காட்டிவிட்டு, சபை மக்கள் அனைவரையும் திரும்பிப் பார்த்தான். அந்தச் சமயத்தில், பூசாரி உடைகளுடன் அப்பா ஆலயத்திற்குள் நுழைந்தார். அம்மா அழுதுவிட்டார். “வரமாட்டேன் என்றார், வந்துவிட்டார்” என்று சந்தோஷமாகக் கூறினார்.

ஜுனியருடைய அப்பாவுடைய வேலைபற்றி அறிந்திருந்த சபை மக்கள் அவரிடம் அன்போடு நடந்துகொண்டார்கள்.

சபை உதவியாளரான ராபர்டோ பெர்னான்டஸ், “வாருங்கள், உங்களுக்காகத்தான் காத்துக்கொண்டிருந்தோம்!” என்று அப்பாவை ஞானஸ்நான தொட்டிக்கு அருகில் அழைத்துச் சென்றார்.

தேவன் அனைத்தையும் திட்டமிட்டிருந்ததை ஜுனியர் உணர்ந்துகொண்டான். ‘நான்தான் முதலில் ஞானஸ்நானம் எடுக்கப் போவது யாருக்கும் தெரியாது, ஆனால் சரியான நேரத்திற்கு அப்பா வந்துவிட்டார். தேவனுடயை திட்டங்கள் பூரணமானவை’ என்று உணர்ந்தான்.

ஒவ்வொருவரும் ஞானஸ்நானம் பெற 10 நிமிடங்கள்தாம் ஒதுக்கப்பட்டிருந்தன; ஆனால் ஜுனியரின் ஞானஸ்நானம் ஒரு மணி நேரம் நீடித்தது.

தண்ணீரில் மூழ்கி ஜுனியர் வெளியே வந்ததும், அப்பாவைக் கட்டிப்பிடித்துக்கொண்டான். “அப்பா, உங்களுடைய மதம் எதுவாக இருந்தாலும், நான் உங்களை அதிகமாக நேசிக்கிறேன்” என்று சொன்னான். பிறகு சபை மக்களுக்கு நன்றிகூறினான்.

பிறகு அப்பா ஜுனியரிடம், “மகனே, இயற்கைக்கு மாறான பல நிகழ்வுகள் நடந்துவிட்டதால், உன்னுடைய மதத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். நீ எந்த மதத்திலும் ஈடுபடக்கூடாது என்று நீண்ட நாட்களாக உன்னைக் கட்டுப்படுத்தி வந்தேன். ஆனால் இப்போது எனக்கு அசாதாரண ஆற்றல் கிடைத்திருப்பதுபோல உணர்வதால், உன்னுடைய மார்க்கத்தை ஏற்றுக்கொள்கிறேன். இயேசுவிடம் நான் செல்வது எனக்கு வேதனையான அனுபவமாக இருக்கக்கூடாது என்பதை மட்டும் விரும்புகிறேன்” என்று சொன்னார்.

அவர்கள் காரில் கிளம்பியபோது, “இங்குள்ள மக்கள் மிகவும் நன்றாக நடந்துகொள்கிறார்கள்” என்று சந்தோஷத்தோடு அப்பா சொன்னார்.